சுபக்ருத் வரு ஆனி மீ
ஜூன் - ஜூலை 2022

மலர்: 5
இதழ்: 3

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

தேஸிக ஸந்தேஶம்

MONTHLY NEWSLETTER FROM:
SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com, web: www.svdd.com



ஸ்ரீ பெரியாழ்வார்
ஆனி - ஸ்வாதி
ஜூலை 8 (வெள்ளி)

ஸ்ரீமந்நாதமுனிகள்
ஆனி - அனுஷம்
ஜூலை 10 (ஞாயிறு)

சுபக்ருத் வரு ஆனி மீ
ஜூன் - ஜூலை 2022

மலர்: 5
இதழ்: 3

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்

திருக்கோவில் பூஜா காலங்கள் *

காலை

ஞாயிறு முதல் புதன் வரை			வியாழன் முதல் சனி வரை		
6.30	-	விச்வரூபம்	6.00	-	விச்வரூபம்
8.30	-	திருவாராதனம்	7.30	-	பொது தரிசனம்
9.45	-	சாற்றுமுறை			

12.00 - உச்சிகாலம்

மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

தர்மகர்த்தாக்கள்:

ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

Editorial Board :

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai & 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com

ஸ்ரீ:

ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்^{3}ரி ஸமம் ஸ்தா^{2}நம் ப்^{3}ரஹ்மாண்டே^{3} நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே^{3}வோ ந பூ^{4}தோ ந ப^{4}விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

''சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோர்ஜுந'' (அர்ஜுந! புண்ணியம் செய்தவர்கள் என்னை பஜிக்கிறார்கள் – கீதை 7.16) என்றான் கண்ணன். அவர்களுள் ஒரு வகையினர், 'ஆர்த்தர்' (இழந்த செல்வம் மறுபடி கிடைக்கவேணும் என ஆசைப்படுபவர்) என்போர்

ஒரு வகையில் நாமும் ஆர்த்தர்கள் தான். ஆம்; ''எம்பெருமானின் வார்ஷிக ப்ரஹ்மோத்ஸவத்தை பழைய வைபவத்துடன் என்று கண்டு களிக்கப் பெறுவோம்? இரண்டு வருஷங்கள் – இல்லை, யுகங்கள் – கழிந்தனவே!'' என்ற பதைபதைப்பு ஒவ்வொருவர் உள்ளத்தையும் பிழிந்தெடுத்துக்கொண்டிருந்தது. ஒரு வழியாக 'கொரானா' புருஷனும் கொட்டாவி விட்டான். சுபக்ருத்வைகாசித் திங்கள் பிறந்தது; மயிலை வேங்கடவன் மெய்விரதம் கொண்டான். ம்ருகசீர்ஷத் தாரையில், கருடத்வஜன் கொடி உயர்த்தினான். ஆஸ்திகர்களின் ஆனந்தமும் உயர்ந்தது.

திருவிழா நடந்துகொண்டிருக்கிறது. நாம் பழைய வைபவம் பெறவேணும் என்றுதான் ப்ரார்த்தித்தோம்; ஆனால் அவனோ, 'வேண்டிற்று எல்லாம் தரும்' வேங்கடவனாயிற்றே. 'நஷ்டம் ப்ராக் ததலாபத: த்ரிபுவநம் ஸம்ப்ரதி அனந்தோதயம்' (நசித்துக்கிடந்த நம் அனுபவம், எண்ணற்ற செல்வச் செழிப்பைப் பெற்றது) என ஆளவந்தார் அநுபவித்த கணக்காயிற்று. இதுகாறும் அநுபவித்தறியா அநுபவம். இனி சில அநுபவத் திவலைகள்...

மூன்றாம் நாள் அதிகாலை; ஓடும் புள்ளேறி வீதி வருவானை ஸேவித்து நின்றிருந்தோம். சாத்துப்படியின் சிகரம் அந்த ஆறடி நீள தாமரைச்சரம் தான். என்ன ஆச்சர்யம்! திருவடியைத் தாங்கி நிற்கும் புள்ளரசனும், அதேபோல் தாமரைச்சரம் பூண்டிருந்தார். பக்கத்தில் நின்றிருந்த பக்தர் வார்த்தை: 'இதைத்தான் 'போக ஸாம்யம்' என்றாரோ வேதாந்தவாரியன்!'

அடுத்த அநுபவம். ஐந்தாம் நாள், பல்லக்கில் நாச்சியார் திருக்கோலம். ஸ்ரீநிவாஸ நாச்சியார் (அடியேன் பிதாமஹியின் திருநாமம் 'சீமாச்சி' என்கிற ஸ்ரீநிவாஸா என்பது நினைவுக்கு வருகிறது) திருமுன்பு ஒரு நிலைக்கண்ணாடி. சிலர் நேரே ஸேவிக்காமல் கண்ணாடியில் ஸேவித்தனர். அதே நண்பர். அடியேனையும் அப்படி ஸேவிக்கச் சொன்னார். சிறு உபந்யாஸம் செய்தார் – நாச்சியாரை நேரே ஸேவித்தால் நமக்கு அவருடைய திருமேனிதான் ஸேவையாகும். கண்ணாடியில் எட்டி ஸேவித்தால் எம்பெருமானுடன் நாமும் புலப்படுகிறோமே. இப்போது சேதநாசேதந விசிஷ்டன் எம்பெருமான் என்பது கிடைக்கிறதே. இது மூலமந்த்ரம் என்ற கண்ணாடியில் தெளியும் தத்துவம் என ஸ்வாமி தேசிகன், (உத்தரக்ருத்யாதிகாரத்தில்) ஸாதித்ததை நடத்திக்காட்டும் உத்ஸவமல்லவா!

மேலும், பல்லக்கு திரும்புகாலில், கீழண்டை மாடவீதி தொடங்கி ப்ரபந்த பாராயண ஸ்தாநத்தில் ஸ்ரீதேசிக ஸ்தோத்ரங்கள் ஸேவிக்கும் வைகரி, தனி அழகு. கோஷ்டியில் ஐந்து வயது சிறார்கள் பங்கேற்றது, கண்கொள்ளாக்காக்ஷி. அவர்கள் மட்டுமல்ல; இருபுறமும் மதிமுக மடந்தையர் / சிறுமியர் வீதியை நிறைத்து உதடு அசைய ஸ்தோத்ரங்களை மனநம் செய்தது, நேரில் அநுபவிக்க வேண்டிய காக்ஷியாகும். (வண்ணப்படங்களை ஸஞ்சிகையில் ஸேவித்து ரஸிக்கலாம்).

6ம் திருநாள். வேணுகோபாலன் திருக்கோலம். திரும்புகாலின் முடிவில், ஸ்வாமி தேசிகனுக்கு மாலை மர்யாதை ப்ரஸாதிக்க ஸந்நிதி வாயிலில் ஸேவை ஸாதிக்கிறார். என் பக்கத்தில் பரிசயமான குரல் (அதே பாகவதரின் முணுமுணுப்பு) கேட்டது – ''ஸ்வாமி தேசிகனிடம் எம்பெருமான் கேட்கிறாரோ! 'அதராஹித சாரு வம்சநாளா: மகுடாலம்பி மயூரபிஞ்சமாலா: ஹரிநீலசிலா விபங்கநீலா: ப்ரதிபாஸ் ஸந்து' என இந்த ஸேவையைத்தானே வேண்டினீர்!''

7ம் நாள், திருத்தேர். நேற்றைய தினம்போல் இன்றும் ஸ்வாமி தேசிகனுக்கு மாலை மர்யாதை ப்ரஸாதிக்க அவர் முன்னே நின்றார் வேங்கடவன். அர்ச்சகர் மாலையைக் களைவதற்குத் தோதாக ஸ்ரீபாதம் தாங்கிகள், தோளுக்கு இனியானை இறக்கிப் பிடித்தனர். ஸேவித்துக்கொண்டிருந்த எனக்கு ஒரு க்ஷணம் திடுக்கிட்டது; தேசிகன் எழுந்தருளியிருக்கும் ஆஸநம் உயரமாகவும், பெருமான் கேடயம் தாழ்ந்தும் இருக்கிறதே? பக்கத்தில் பாகவதரின் கிசுகிசுப்பு கேட்கிறது – ''இதைத்தான் ஸ்வாமி தேசிகன் 'பார்த்தன் தேர்முன்னே தாம் தாழநின்ற'தாக அநுபவித்தார்போலும்!''

'தேரேடு போச்சு திருநாள்' என்பார்கள்; இனி இவ்வநுபவம்பெற ஒரு வருடம் காத்திருக்க வேணுமே? என் கண்கள் பாகவதரைத் தேடுகின்றன. ❊

ஸ்ரீ:

Brahmotsavam Back In Its Pristine Form

FROM THE DESK OF TRUSTEES

The month of Aani at once brings to the mind two illustrious torch-bearers of our Sampradayam – Sri Periyazhwar and Sriman Nathamunigal – whose Thirunakshatrams are celebrated on the day of Swathi and Anusham respectively. As is the custom for the Azhwars and the Acharyas, Thirumanjanam along with Perumal in the morning and Purappadu, Sevakalam and Satrumurai in the evening will mark the occasions.

The Azhwar, father of Sri Andal, established the superiority of Sriman Narayana in unequivocal terms, while the Acharya retrieved the Nalayira Divya Prabandham and gifted the same for posterity. The Periyazhwar Thirumozhi, starting with Pallandu, comprises 473 exquisite Pasurams that include vivacious narration of the little Krishna at different stages of His growth. The Azhwar has also authored a commentary on Kalpa Soothram.

Nathamunigal, besides his massive contribution as regards the Aruli-cheyal, has composed two esoteric works titled Nyaya Thathvam and Yoga Rahasyam, the former on logic and the latter on the art of Yoga.

The other important festivals associated with the month of Ani are the seven-day Kodai Utsavam culminating in Hastham and Sri Sudharsana Jayanth (Chithirai). Additionally, Sri Sudharsana Maha Yajnam will be performed on June 26 for the welfare of devotees and general public.

Earlier, the advent of Vaikasi was marked by Nrusimha Jayanthi Utsavam. As usual, Kadai Vellikkizhamai Utsavam for Sri Alarmelmanga Thayar was performed, heralding the Brahmotsavam (June 1 to 10) – a full-fledged version with Vahana Purappadu conducted after a gap of two years.

Among the highlights of the Brahmotsavam was the Mangalasasanam of His Holiness Srirangam Srimath Andavan during Thotti Thirumanjanam. He also performed Manthra Pushpam ahead of Theertha Prasadham and Sri Satari Maryadhai.

All the Kainkaryaparas, including those from Sripatham Association, rendered dedicated and enthusiastic service to the Lord during the Brahmotsavam and we record our sincere thanks to one and all for the same. ❇

ஸ்ரீ:

சுபக்ருத் வருட ஆனி மாத பஞ்சாங்கம்

ஆங்கில தேதி	தமிழ் தேதி	திதி	வாரம்	நக்ஷத்ரம்	உத்ஸவம்	உபயம்
ஜூன்/ ஜூலை	ஆனி					
15/06/2022	1	ப்ரதமை	புதன்	மூலம்	ஆனி மாதப்பிறப்பு - பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை வீதிபுறப்பாடு	ஸ்ரீ M.V. ஸ்ரீநிவாஸன் குடும்பத்தார். C/o. ஸ்ரீ S. நாராயணன்
16/06/2022	2	த்விதீயை	வியாழன்	பூராடம்	ஸேனைநாதன்	
17/06/2022	3	த்ருதீயை / சதுர்த்தி	வெள்ளி	உத்தராடம் / திருவோணம்	பெருமாள், தாயார், மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை தாயார் உள்புறப்பாடு	அத்திகிரி அருளாளன்
18/06/2022	4	சதுர்த்தி / பஞ்சமி	சனி	ச்ரவணம்	காலை பெருமாள், தேசிகன் திருமஞ்சனம். மாலை வீதி புறப் பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	கொடநகர் ஸ்ரீ S. துரைஸ்வாமி ஐயங்கார் பண்ட். C/o ஸ்ரீ. E. ஸ்ரீதரன்
19/06/2022	5	பஞ்சமி / ஷஷ்டி	ஞாயிறு	அவிட்டம்	ஸ்ரீபூதத்தாழ்வார்	
20/06/2022	6	ஸப்தமி	திங்கள்	சதயம்	காலை ஸ்ரீ பேயாழ்வார் திருமஞ் சனம். மாலை வீதி புறப்பாடு	ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன்
21/06/2022	7	அஷ்டமி	செவ்வாய்	பூரட்டாதி	திருமால்வடை	
22/06/2022	8	நவமி	புதன்	உத்தரட்டாதி	திருமால்வடை	
23/06/2022	9	தசமி	வியாழன்	ரேவதி	திருமால்வடை	
24/06/2022	10	ஏகாதசி	வெள்ளி	அச்வினி	காலை பெருமாள் தாயார் மூலவர் - உத்ஸவர் திருமஞ்சனம். மாலை - பெருமாள் புறப்பாடு. பின்பு தாயாருடன் உள் புறப்பாடு	ஏகாதசி: ஸ்ரீ V. ராஜ கோபாலன். வெள்ளிக் கிழமை: ஸ்ரீமதி A.L. ரங்கமணி
25/06/2022	11	த்வாதசி	சனி	பரணி	திருமால்வடை	
26/06/2022	12	த்ரயோதசி	ஞாயிறு	க்ருத்திகை	ஸ்ரீ திருமங்கையாழ்வார் ஆஸ்தானம்.	
27/06/2022	13	சதுர்தசி	திங்கள்	ரோஹிணி	ஸ்ரீ கண்ணன், ஸ்ரீ திருப்பாணாழ் வார் ஆஸ்தானம்	
28/06/2022	14	சதுர்தசி/ அமாவாசை	செவ்வாய்	ம்ருகசீர்ஷம்	ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள்	
29/06/2022	15	அமாவாசை	புதன்	திருவாதிரை	கோவில் அமாவாசை. காலை பெருமாள் திருமஞ்சனம். மாலை வீதி புறப்பாடு	ஸ்ரீ M.A. பார்த்தஸாரதி
30/06/2022	16	ப்ரதமை	வியாழன்	புனர்வஸு	கோடை உத்ஸவம் - 1ஆம் நாள். பெருமாள் தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு	ஸ்ரீ K.S. ஸந்தானம் - K. வரதராஜன்

01/07/2022	17	த்விதீயை	வெள்ளி	புஷ்யம்	கோடை உத்ஸவம் – 2ஆம் நாள். பெருமாள் தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு	ஸ்ரீ V.P. ப்ரேம்குமார் & ஸ்ரீ C.V. கோபால்
02/07/2022	18	த்ருதீயை	சனி	ஆயில்யம்	கோடை உத்ஸவம் – 3ஆம் நாள். பெருமாள் தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு	ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன் – K. ரங்கராஜன்
03/07/2022	19	சதுர்த்தி	ஞாயிறு	மகம்	கோடை உத்ஸவம் – 4ஆம் நாள். பெருமாள் தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு	ஸ்ரீ T.C. ரங்கராஜன் – ஸ்ரீ G. பத்ரி நாரயணன்
04/07/2022	20	பஞ்சமி	திங்கள்	மகம் / பூரம்	கோடை உத்ஸவம் – 5ஆம் நாள். பெருமாள் தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு	ஸ்ரீமதி ஸ்ரீநிதி மோஹன் – ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன்
05/07/2022	21	ஷஷ்டி	செவ்வாய்	பூரம்	கோடை உத்ஸவம் – 6ஆம் நாள். பெருமாள் தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு. பிறகு தாயார் உள்புறப்பாடு	ஸ்ரீ Dr. P. க்ருஷ்ணமூர்த்தி – ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸன்
06/07/2022	22	ஸப்தமி	புதன்	உத்தரம்	கோடை உத்ஸவம் – 7ஆம் நாள். பெருமாள் தாயார் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு	ஸ்ரீ R.S. ராகவன் – ஸ்ரீ N.R. ஸ்ரீநிவாஸாசார்யர்
07/07/2022	23	அஷ்டமி	வியாழன்	ஹஸ்தம்	ஸ்ரீ ஸுதர்சன ஜயந்தி. காலை சக்கரத்தாழ்வார் மூலவர் உத்ஸவர் திருமஞ்சனம்	ஸ்ரீ N.R. ராமஸ்வாமி
08/07/2022	24	நவமி	வெள்ளி	சித்திரை	பெரியாழ்வார் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், தாயார், ஆழ்வார் திருமஞ்சனம். மாலை பெருமாள் சின்ன கருடன், ஆழ்வார் யானை வாஹனம் வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	பெரியாழ்வார் சாற்றுமுறை: M.D. ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட். தாயார் உத்ஸவம்: ஸ்ரீ ஸ்ரீராமன்
09/07/2022	25	தசமி / ஏகாதசி	சனி	ஸ்வாதி	திருமால்வடை	
10/07/2022	26	ஏகாதசி	ஞாயிறு	விசாகம் / அனுஷம்	ஸ்ரீமன் நாதமுனிகள் திருநக்ஷத்ரம். காலை பெருமாள், நாதமுனிகள் திருமஞ்சனம். மாலை வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	ஏகாதசி: ஸ்ரீமதி பாமா. C/o. N. ஸ்ரீகாந்த். ஸ்ரீமன் நாதமுனிகள் திருமஞ்சனம் மட்டும்: ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் பண்ட். C/o. A. கோதண்டபாணி; புறப்பாடு: ஸ்ரீ A. வாஸுதேவன் – ஸ்ரீ N.V. பாலாஜி
11/07/2022	27	துவாதசி	திங்கள்	கேட்டை	தொண்டரடிப்பொடியாழ்வார்	
12/07/2022	28	சதுர்தசி	செவ்வாய்	மூலம்	திருமால்வடை	

13/07/2022	29	பௌர்ணமி	புதன்	பூராடம்	பெருமாள் உத்ஸவர் திரு மஞ்சனம். மாலை வீதிபுறப்பாடு	ஸ்ரீ N. ஸ்ரீநிவாஸன்
14/07/2022	30	ப்ரதமை	வியாழன்	உத்தராடம்	ஸ்ரீ ஆளவந்தார்	
15/07/2022	31	த்விதீயை	வெள்ளி	ச்ரவணம்	காலை பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர் தேசிகன் உத்ஸவர் திருமஞ்சனம், மாலை பெருமாள் தேசிகன் வீதி புறப்பாடு, தாயார் உள்புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம் சாற்றுமுறை	ஆர்த்தி S. நாராயணன்
16/07/2022	32	த்ருதீயை	சனி	அவிட்டம்	ஸ்ரீ பூதத்தாழ்வார்	

பட்டர்பிரான் கிளிகண்ணி

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

1. ஆனிமாத சுவாதிதன்னில்
அம்கலுழன் அம்சமென்று
வந்தபெரியாழ்வாரன்றோ கிளியே
சொந்தம் சோலை மாலுக்கென்றான் கிளியே
விந்தையனைப் போற்று போற்று!

2. பாண்டியனின் நல்லவையில்
பரனென நாரணனை
நாட்டினான் பட்டர்பிரான் கிளியே
நமக்காகக் கிழியுங்கொண்டான் கிளியே
நெஞ்சிலிட்டுப் போற்று போற்று!

3. விட்டுச்சித்தன் என்றபெயர்
இட்டதினால் தானுமந்த
விட்டுவையே சித்தம் கொண்டான் கிளியே
விட்டுவுமே சித்தம் கொண்டான் கிளியே
எட்டி நீயும் போற்று போற்று!

4. தூயதுழாய்த் தோட்டத்திலே
கோதையைத்தான் கண்டெடுத்து
ஆயன் கதை செப்பிவளர்த்தான் கிளியே
அரங்கனுக்கு மணமுடித்தான் கிளியே
ஆனமாமன் போற்று போற்று!

5. கண்ணனையே பிள்ளையென்று
வண்ணத்தமிழ் மாலை செய்து
பிள்ளைத்தமிழ் நமக்களித்தான் கிளியே
அள்ளி நாமும் அதைவளர்த்தோம் கிளியே
வள்ளலன்றோ போற்று போற்று!

6. வில்லிபுத்தூர் வேதக்கோனை
சொல்செயலில் பரிவுள்ளோனை
பாடிவைத்தான் பல்லாண்டென்றே கிளியே
ஆடிநிற்போம் அதைச்சொல்லியே கிளியே
தாளமிட்டுப் போற்று போற்று!

7. வேதம்காணும் பிரணவம் போலே
ஓதிவர்தம் பாக்களெல்லாம்
நாதமுனி நமக்களித்தார் கிளியே
பாதைகொண்டு பரிமளிப்போம் கிளியே
பாசுரங்கள் போற்று போற்று!

8. ராமகிருஷ்ணன் குணந்தொடுத்து
நாமமிடவும் வழிவகுத்து
ராமனிட்ட அடையாளங்கள் கிளியே
நாம்மகிழ நமக்களித்தான் கிளியே
நாதனெனப் போற்று போற்று!

9. நானூற் றெழுபது மூன்றும்
நற்றமிழில் நமக்கே தந்து
பொற்பதமே காட்டும் பிரான் கிளியே
சொற்பொருளும் பணிந்தறிவாய் கிளியே
நற்பதமே போற்று போற்று!

10. பாவுக்கொரு சந்ததியை
மேவித்தந்த ஆழ்வாருண்டோ
ஆவியென்றே நாம் கொள்ளுவோம் கிளியே
அந்தரங்கன் அடைந்திடுவோம் கிளியே
சொந்தமவன் போற்று போற்று!

11. கல்பசூத்திரத்தில் முறையே
சொல்லியதைத் தாம்விரித்து
நீலவண்ணன் வேள்விகண்டான் கிளியே
கோலமிட்டே சாயைகொள்வோம் கிளியே
காலமெல்லாம் போற்று போற்று!

12. அடியார்க்கடியான் இட்ட
பட்டர்பிரான் கிளிகண்ணியை
இட்டமுடன் இனிதுரைப்பார் கிளியே
எட்டிடுவார் வைகுந்தமே கிளியே
விட்டுசித்தன் போற்று! போற்று!

ஸ்ரீ:

பக்திக் கடல்

ஸ்ரீ உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

நம் பூர்வாசார்யரான ஆளவந்தார், எம்பெருமானின் பொருட்டு துதி செய்யும் வடமொழிப் பாக்களில் ரத்னம் என்று கொண்டாடப்பெற்ற **ஸ்தோத்ர ரத்னம்** என்னும் க்ரந்தத்தில் முதல் ஐந்து ச்லோகங்களினால், தம்முடைய ஆசார்யர்களை மிகுந்த நன்றியுணர்வுடன் வணங்குகிறார்.

அவற்றில் முதல் மூன்று ச்லோகங்களில் மூன்று படிகளால் தம்முடைய பிதாமஹரும் தம்முடைய ஆசார்யருக்கும் ஆசார்யராகிற ஸ்ரீமந்நாதமுனிகளைக் குறித்து நமஸ்காரங்களைக் கூறுகிறார்.

ஆளவந்தார் தாம் நாதமுனிகளின் திருபெயரனாராக அவதரித்ததாலேயே தமக்கு மணக்கால் நம்பி என்னும் ஆசார்யரின் திருவடி ஸம்பந்தம் ஏற்பட்டதன் பொருட்டும், அந்த நாதமுனிகளே தமக்குப் ப்ராசார்யனானமை (ஆசார்யனுக்கு ஆசார்யன்) பொருட்டும், உலகத்திற்கு உபகாரம் செய்து ஸ்ரீவைஷ்ணவ ஸத்ஸம்ப்ரதாயத்திற்கு தலைவராக இருக்கும் பொருட்டும் ஸ்ரீநாதமுனிகளை குறித்துக் முதல் மூன்று ச்லோகங்களால் ஸ்ரீஆளவந்தார் போற்றிப்புகழ்கிறார்.

இதில் முதல் ச்லோகத்தில் உள்ள அர்த்த விசேஷங்களை சிறிது விண்ணப்பம் செய்கிறேன்.

நமோகுசிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞாநவைராக்ய ராசயே|
நாதாய முநயே அகாதபகவத் பக்திஸிந்தவே||

'ஆராயவியலாத, ஆச்சர்யமான, அனாயாஸமாய் பிறந்த நல்லறிவும், வைராக்யமுமாய் சேர்ந்ததொரு குவியலாய், திருமால் விஷய த்தில் ஆழமான பக்திக் கடலாய் விளங்குகின்ற நாதனென்ற முனியின் பொருட்டு எனது வந்தனம்' என்பது இந்த ச்லோகத்தின் திரண்டகருத்து.

எந்த ஜ்ஞானத்தினால் மோக்ஷம் நமக்கு சித்திக்குமோ எதனால் திருமகள் கேள்வனை அறியலாமோ அதுவே ஜ்ஞானமாகும்.

வைராக்யமாவது பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணன் நீங்கலான மற்றைய பதார்த்தங்களில் ஆசையில்லாத விரக்தியேயாகும்.

அ) ஸ்ரீநாதமுனிகளுடைய ஜ்ஞான வைராக்யங்கள் இப்படிப்பட்டவை என்று பரிசோதிக்கக் கூடாத வையாதலால் அவை அசிந்த்யங்களாகவும்,

ஆ) இவருடைய ஜ்ஞான வைராக்யங்கள் உலகத் தில் நாம் காணமுடியாவையாகவும் ஆச்சர்யங் களாகவும் உள்ளதால் அத்புதங்களாகவும்,

இ) இந்த ஜ்ஞான வைராக்யங்கள் இவரது ப்ரயத்னம் இல்லாமல் எம்பெருமானின் அனுக்ரஹத்தாலும், நம்மாழ்வார் போன்ற ஸதாசார்யர்களின் ப்ராஸாதத்தாலும்இவருக்குஉண்டானமையாலும் இவைகள் அக்லிஷ்டமாகவும் உள்ளன என்று உணர்த்துகிறார்

இங்கு ஜ்ஞானத்தாலும் வைராக்யத்தலும், பக்தியாலும் நிறைந்த நாதமுனிகள் என்று ஜ்ஞான வைராக்யத்தை ஒன்று சேர்த்தும் பக்தியை தனியாக கூறியதின் தாத்பர்யம் இந்த மூன்று குணங்களும் மோக்ஷமடைய ஆசைப்பட்டவர்களுக்கு ப்ரதானங்களாயினும் அவைகளுள் பக்தி மிகவும் முக்கியம் என்பதை குறிப்பதற்கே. மேலும் ஜ்ஞானமும் வைராக்யமும் பக்தி அடைவதற்கு ஸாதனங்கள் என்று வேதாந்த சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளமையால் இங்கு பக்தியை தனியாக உணர்த்துகிறார்.

பெரியவர்களாகவும் பூஜிக்கத்தகுந்தவர்களாகவும் இருப்பவர்களிடம் ஸ்நேஹ பூர்வமாகவும் எப்பொழுதும் செய்யப்படும் ப்ரீதியே பக்தியெனப்படும். இந்த பக்தியை வேதனம், உபாஸனம், த்யானம் என்றும் வேதாந்தங்கள் ஓதுகின்றன.

இந்த பக்திக்கு, ஸர்வ கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாகவும், துர்குணங்களின் ஸம்பந்த மில்லாமலும், ஸர்வருக்கும் ஸ்வாமியாகவும் விளங்கும் திருமாலான பகவானே யோக்யன் என்பதனால் இது 'பகவத் பக்தி' என்று ஸ்ரீஆளவந்தாரால் இங்கு குறிப்பிடப்படுகின்றது.

ஸமுத்ரம்போல் மிகவும் ஆழமானதாலும், அபாரமாகவும், ஒருவராலும் உலர்த்தமுடியாததாலும், இந்த பக்தியையுடைய ஸ்ரீநாதமுனிகளை 'அகாத பகவத் பக்தி ஸிந்து' என்று போற்றுகிறார்.

இவருக்கு 'ரங்கநாதன்' என்று இயற்பெயர் இருப்பினும், சுருக்கமாக 'நாதன்' என்றும், எல்லோருக்கும் ஸ்வாமியாக இருந்து, எப்பொழுதும் எம்பெருமானையே மனனம் பண்ணுபவராதலால் 'முனி' என்றும் காரணப்பெயர்களாகி, இவற்றின் கூட்டுப்பெயரான 'நாதமுனி' என்று மங்களாசாஸனம் செய்யப்பட்டார்.

பகவத் வந்தனாமான இந்த ஸ்தோத்ர ரத்னத்தை ஸ்ரீஆளவந்தார், பாகவத வந்தனமான ஆசார்ய வந்தனத்துடன் தொடங்கி, அந்த ஆசார்யரின் அனுக்ரஹத்துடன் க்ரந்தத்தை தொடர்கிறார்.

கண்ணுக்கினியன

கடை வெள்ளிக்கிழமை

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்

கண்ணுக்கினியன

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்

கண்ணுக்கினியன

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்

கண்ணுக்கினியன

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்

கண்ணுக்கினியன

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்



ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்

கண்ணுக்கினியன

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்

ஸ்ரீ:

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம்

ஸ்ரீ:

பழக்கமும் வழக்கமும்

ஸ்ரீ உ.வே. காவனூர் ஸுதர்சநாசார்யர் ஸ்வாமி, மேற்கு மாம்பலம்

கடல் போன்ற விஷயங்களை கையில் கனி என்று தருவது ஸ்வாமி ஸ்ரீ தேசிகனின் அருளிச்செயல்களின் விசேஷமாகும். அவ்வப்போது தகுந்த உதாஹரணங்கள், ச்ருதிகள், ஸ்ம்ருதி வாக்யங்கள், புராணக் கதைகள் முதலியவற்றை நமக்கு புரிய வேண்டும், நாம் தெளிவுற வேண்டும் என்பதற்காக அருள்வார்.

நன்றே வருவதெல்லாம் நமக்குப் பரம் ஒன்றிலதே (ஸ்ரீ மெய்விரதமான்மியம்) என்பவர்கள் ப்ரபந்நர்கள். இது மோக்ஷ உபாயமான சரணாகதி / ந்யாஸம் அனுஷ்டித்தோர்க்கு. **மெய்யில் வாழ்க்கையை மெய் எனக்** (பெருமாள் திருமொழி) கொள்ளாதது இதற்கு முக்யம். அதாவது தேஹம், அதன் யாத்ரை நிரந்தரம் அல்ல என்று உணர்தல். இதற்கு ஜீவன் தன் ஸ்வரூபத்தை உணர்தல் பலவிதங்களில் அவச்யமாகிறது. ஜீவன் பெறப்போகும் நன்மைகளுக்கும் அஸ்திவாரம் ஆகிறது.

ஜீவன் தன் ஸ்வரூபத்தை உணர, ஜீவனின் **ஸம்ஸர்க்கம்** (பழக்கம் என்று இங்கு பொருள்), ஸஹவாஸம் மிகவும் முக்யம் என்று ஆசார்யர் இரண்டு சிறு கதைகள் மூலம் உணர்த்துகிறார்.

அரசன் ஒருவன் தன் மனைவி, குழந்தையுடன் வேட்டைக்காகச் சென்றான். அரசனின் வேட்டையை ரஸிக்கத் தொடங்கினாள் அவன் மனைவி. அரச குமாரனை நடுக்காட்டில் விட்டு விட்டனர். வழி மாறிய குழந்தையை ஒரு வேடுவன் கண்டு, காப்பாற்றி, தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றான். நாள்கள் சென்றன. ராஜகுமாரன் வேடர் குலத்துக் குழந்தைகளுடன் சேர்ந்து வளர்ந்தான். பேசும் பேச்சு, உடுத்தும் உடை , உண்ணும் உணவு எல்லாம் வேடர்கள் குல வழக்கப்படி இருந்தது. தான் அரசகுலம், ராஜபுத்ரன் என்பதை அறியாமல் வேடர்களில் ஒருவனாக காலத்தைக் கழித்து வந்தான்.

காலம் இவ்வாறே கழியுமாகில் அரசகுலத்திற்கு என்று ஏற்பட்ட போகங்கள், ராஜ்ய பரிபாலனம் இத்யாதிகள் இவனுக்குக் கிட்டா.

இவனின் ஜாதவிசேஷமான சில ராஜ லக்ஷணங்களை அறிந்தவர்கள் சில நல்லோர் இவனின் நிலையைக்கண்டு வருந்தி, இவனை மீட்கும் பொருட்டு, மற்றவர்களுக்கும் இவனுக்கும் இருக்கும் வேறுபாடுகளை எடுத்துரைத்தனர். இவனது உண்மையான வாழிடம் வேடர் குடிசை அல்ல, அரண்மனை என்று அவனை சிந்திக்கச்செய்தனர். அவனும் உண்மையை உணர்ந்தான்.

நல்லோர் அரசனிடம் பேசி நடந்ததை விளக்கி, குமாரனைக் காணும் ஆவலை உண்டு பண்ணி, இருவரையும் சேர்த்து வைத்தனர். தன் தந்தையுடன் சேர்ந்தபின் ராஜகுமாரனாகக் கொண்டாடப்பட்டு ராஜபோகங்களை அனுபவித்து இன்புற்றான்.

ஸஹோதரர்களான இரு கிளிகளில் ஒன்று காட்டில் ஒரு வேடனால் பிடிக்கப்பட்டு அவனால் வளர்க்கப்பெற்றது. மற்றொன்றை ரிஷியின் சிஷ்யர் ஒருவர் பிடித்து ஆச்ரமத்திற்கு எடுத்துச் சென்று வளர்த்தார்.

ஒருவர் வேடனின் குடிசை வழியாக சென்ற போது, அங்கிருந்த கிளியானது **''பிடி, வெட்டு''** என்று கூறியது. அவரே ஆச்ரமத்தைக் கடக்கும் போது அங்கிருந்த கிளியானது, **''ஸ்வாகதம், இதம் வ: பாத்யம், இதம் வோ அர்க்யம்''** என்று உபசாரச் சொற்களைக் கூறியது. வியந்த அவர், கிளிகளின் சொற்களில் இருந்த வித்யாஸத்தின் காரணத்தை அறிய விரும்பினார். ஆச்ரமத்தில் இருந்த கிளி ஸஹவாஸத்தாலேயே இவ்வளவு வித்யாஸம் என்று கூற அவர் தெளிவடைந்தார்.

ஸம்ஸர்கஜா: தோஷ குணா: பவந்தி அதாவது பழக்கத்தால் தோஷமும் குணமும் உண்டாகின்றன.

மேற்கண்ட கதைகளை சற்றே நோக்கித் தொகுக்குகையில், பின்வரும் ஒப்புகளை நாம் அறியலாம்.

ராஜகுமாரன் - ஜீவன்
வேடுவ வாஸம் - ஸம்ஸாரம்
அவனை மீட்டோர்கள் - ஸம்ப்ரதாயப் பெரியோர்கள் / ஆசார்யர்கள்
ராஜா - ஸ்ரீமந் நாராயணன்
ராஜ போகம் - மோக்ஷம்
ஆச்ரமத்தில் வளர்ந்த கிளி - ஜீவனின் ப்ரபத்தி உத்தர க்ருத்யம் (நல்லோர்களின் சேர்க்கை)

ஆக நாம் நம் ஸ்வரூபத்தை உணர்வதே பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்யர்களுக்கும், உபாய அனுஷ்டானத்திற்கும், உத்தர க்ருத்யத்திற்கும் அடிப்படை ஆகும். நிற்க.

ஒருவன் ஸத்துக்களின் சேர்க்கை மூலமாகவே க்ஷேமங்களை அடைய முடியும். ஸத்துக்கள்

ஒரே மனப்பான்மை உடையவர்கள், வாக் சுத்தி உள்ளவர்கள். நாடி வந்தவரை ஒரு போதும் விடாதோர். பெரும் ஆபத்திலிருந்தும் காப்பாற்ற வல்லவர்கள். இவர்களுடன் நட்பு / பழகுதல் நன்மை, இன்பம் பயக்கும்.

ஸுக்ரீவனிடம் பெருமாள், **உபகாரபலம் மித்ரம் அபகார: அரி லக்ஷணம்** - உதவுதலே நட்பின் அடையாளம், த்ரோஹம் எதிரியின் அடையாளம் என்று அருள்கிறார்.

தைத்திரீய ப்ராஹ்மணம் 2ஆம் அஷ்டம் 8ஆம் ப்ரச்னத்தில் நல்லோர் சேர்க்கையால் இந்த்ரன் நாசம் அடையாமல் இருந்ததை அறியலாம்

.....வ்ருத்ரஸ்ய த்வா ச்வஸதாதீஷமாணா:| விஸ்வே தேவா அஜஹுர்யே ஸகாய:| மருத்பிரிந்த்ர ஸக்யந்தே அஸ்து||.....

இந்த்ரனை எதிர்த்து யுத்தம் செய்யும் ஒரே நோக்கோடு த்வஷ்டாவால் ஸோமயாகத்தில் உண்டாக்கப்பட்டான் வ்ருத்ரன் எனப் பெயர் கொண்ட அஸுரன். ப்ரஹ்மாண்டமான சரீரம் கொண்ட அவனை இந்த்ரனால் மட்டும் எதிர் கொண்டு போர் செய்து வீழ்த்துவது அஸாத்யம். இதை உணர்ந்து இந்த்ரன் தேவர்களிடம் பேசுகையில் ''வ்ருத்ரனை நான் எதிர்கொண்டு சண்டை இடுகையில், எனக்கு நீங்கள் உத்ஸாஹத்துடன் பலமாக இருக்க வேண்டும். என்னைக் கைவிடக்கூடாது'' என்றான். தேவர்களும் இதை ஏற்று வ்ருத்ரஇந்த்ர யுத்தத்தில் இந்த்ரனுக்கு பலமாக இருக்கவெண்ணி படை திரண்டனர்.

சொல் தவறாத ஸத்துக்கள் வேதத்தில் வரும் மருத்கள் போன்றவர்கள். நம்மை ஊக்குவித்து, நல்வழிப்படுத்துவோர்கள். அவர்களுடன் சேர்க்கை, நட்பு ஒருபோதும் நம்மை திசைமாற்றாது.

வ்ருத்ரன் ஸாமான்யன் அல்லன். சுரனாக இருப்பது மட்டும் அல்லாமல், தர்மங்களை அறிந்தவன். தான் படைக்கப்பட்டதின் நோக்கை நன்கு அறிந்தவன். மேலும், அஹங்கார - மமகாராதி துர்குணங்கள் கொஞ்சமும் இல்லாதவன்.

இந்த்ரனை மட்டும் சண்டையிட்டு வென்றால் போதும். மற்ற தேவர்கள் நம் இலக்கல்ல என உணர்ந்து, அவர்களை பயமூட்டி ஓடும்படி செய்யலாம் என முடிவெடுத்து தன் முழு சக்தியுடன் பெரிய மூச்சை விட்டான். தேவர்கள் வீசி எறியப்பட்டு, வ்ருத்ரனின் பலம் அறிந்து ஓடினர். பயத்தில் இந்த்ரனிடம் கொடுத்த வாக்கை மறந்தார்கள்.

ஆனால் **மருத்** என்ற தேவர்கள் மட்டும் இந்த்ரனை விடாமல், யுத்தத்தில் ஊக்கம் அளித்தனர் -

....மருத்வாந்நோ பவத்விந்த்ர ஊதீ| இந்த்ரோ வ்ருத்ரமதரத் வ்ருத்ரதூர்யே| அநாத்ருஷ்யோ மகவா சுர இந்த்ர:|....

இந்த்ரனும் வ்ருத்ரனை வீழ்த்தினான். இவர்களும் கைவிட்டு இருந்தால் தோல்வி அடைத்திருப்பான். இவர்களின் ஆதரவு / உண்மையான நட்பால் வெற்றி அடைந்தான். இதற்கு க்ருதஜ்ஞதையை நிவேதனம் செய்யும் அடையாளமாக யாகத்தில் தன்னுடைய பாகம் ஒன்றில் மருத்களுக்குப் பங்கு அளித்தான்.

சொல் தவறாத ஸத்துக்கள் வேதத்தில் வரும் மருத்கள் போன்றவர்கள். நம்மை ஊக்குவித்து, நல்வழிப் படுத்துவோர்கள். அவர்களுடன் சேர்க்கை, நட்பு ஒருபோதும் நம்மை திசைமாற்றாது.

ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் ஸத்துக்களின் சேர்க்கையைப் போற்றுகிறார். தமது அடையாளமாகக் கொண்டாடு கிறார். **நாரணனுக்கு அடியேன் நான் அடிமை பூண்ட, நல் அடியார்க்கு அல்லால் மற்று ஒருவர்க்கு அல்லேன்**

[அம்ருதாஸ்வாதிநீ - 2]

சாகாந்த தேசிகனாம் தூப்புல் திருவேங்கடேச குரு வாசகமே எங்களுக்கு வாழ்வு என்றிருக்கும் நமக்கு ஸத்துக்களின் சேர்க்கையே இஹ ஜன்ம அடையாளம் எனவுணர்ந்து பெரியோர்களுடன் பழகி க்ஷேமங்களை அடைவோம். ✻

ஆனியில் முக்கிய உத்ஸவங்கள்

ச்ரவணம் ஜூன் 18 (சனி) & ஜூலை 15 (வெள்ளி)
ஸுதர்சன ஹோமம் ஜூன் 26 (ஞாயிறு)
கோடை உத்ஸவம் (7 நாட்கள்) ஜூன் 30 (வியாழன்) முதல் ஜூலை 6 (புதன்) வரை
ஸுதர்சன ஜயந்தி ஜூலை 7 (வியாழன்)
பெரியாழ்வார் திருநக்ஷத்ரம் ஜூலை 8 (வெள்ளி)
நாதமுனிகள் திருநக்ஷத்ரம் ஜூலை 10 (ஞாயிறு)

Sponsorships and donations towards publication expenses are welcome

ஸ்ரீ:

தேவு மற்றறியேன்

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

ஸம்ஸார பந்தத்தில் கட்டுண்டு ஜீவன்கள் படும் அவஸ்த்தையானது கண்டு இமையோர் தலைவனுக்குப் பொறுக்கமுடியவில்லை. அவர்களைத் துன்பத்திலிருந்து உய்விக்க இராமனாகவும் கண்ணனாகவும் அவர்கள் மத்தியிலேயே அவதரித்து, அவர்களைத் திருத்திப் பணிகொள்ளப் பார்த்தான். இருப்பினும் அவர்கள் திருந்தவில்லை.

பின்பு விஷ்வக்ஸேநரிடம், 'நான் லீலாவிபூதியிலுள்ள உயிர்களை உஜ்ஜீவிப்பதற்காகப் பல வகையான யோனிகளில் அவதரித்து அவர்களுடன் கலந்து பரிமாறி, அவர்களை நல்வழிப் படுத்த முயன்றும் அவர்களுடைய அஜ்ஞானம் நீங்க வழியில்லை. கர்ம வாஸனையால் ஸம்ஸாரமென்னும் இருளில் இருந்துகொண்டு என்னை நினைக்காமலும் மோக்ஷத்திற்க்காக என்னை அணுகாமலும் இருக்கின்றனர். ஆகவே நீர் பூவுலகில் அவதரித்து, ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்து, மெய்நின்ற ஞானத்தை ஊட்டி, அவர்களின் அழுக்குடம்புகளைத் தொலைக்கும்படி செய்து எமக்கு ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யும்படி மாற்றியருளும்' என்று நியமித்தருளினான்.

அதன்படி எம்பெருமானால் மயர்வற மதிநலம் அருளப்பெற்று, விஷ்வக்ஸேநர், ஆழ்வார்களுள் ப்ரதானமானவராகவும், ப்ரபந்நஜன கூடஸ்தருமாய், ஓர் வைகாசி விசாகத்தில் ஸ்வாமி நம்மாழ்வாராக இப்புவியில் அவதரித்து நான்கு வேதங்களின் ஸாரமாக நான்கு திவ்ய ப்ரபந்தங்களைத் தந்தருளினார். தம் ஸ்ரீஸூக்திகள் மூலம் தீர்ந்த அடியவர்களைத் திருத்தி எம்பெருமானிடத்தில் பணிகொள்ள வைப்பதையே ஆழ்வார் தன் திருவவதார வைபவத்தின் தலையாய கர்த்தவ்யமாகக் கொண்டார்.

ஆழ்வார் மூலமாக எம்பெருமான் நமக்கு செய்யும் இப்பேருபகாரத்தை ஸ்வாமி தேசிகன் கொண்டாடுகிறார்:

அந்தமிலாப் பேரின்பம் அருந்த ஏற்கும்
அடியோமை அறிவுடனே என்றும் காத்து
முந்தை வினை நிரை வழியில் ஒழுகாது எம்மை
முன்னிலையாம் தேசிகர் தம் முன்னே சேர்த்து
மந்திரமும் மந்திரத்தின் வழியும் காட்டி
வழிப்படுத்தி வானேற்றி அடிமை கொள்ளத்
தந்தையென நின்ற தனித் திருமால் தாளில்
தலை வைத்தோம் சடகோபன் அருளினாலே.

[அம்ருதாஸ்வாதினி - 28]

'எல்லையில்லா ஆனந்தத்தை அளிக்கும் மோக்ஷமென்னும் ஸாதனத்திற்குத் தகுதியாயுள்ள நம்மைக் காத்து, ஸ்திரமான தர்ம பூத ஜ்ஞானத்தைக் கொடுத்து எம்பெருமான் நம்மை ரக்ஷித்தருளுகிறான். மேலும், அநாதியான கர்ம ஸம்பந்தத்தில் நம்மை அழுத்தாமல் நம்மைக் கரை சேர்ப்பதற்குப் ப்ரதானமான ஸ்தானத்தில் நிற்கின்ற ஆசார்யர்களிடம் ஒரு ஸம்பந்தத்தை உண்டு பண்ணி, திருமந்த்ரம் முதலிய மந்த்ரத்தையும் அந்த மந்த்ரத்தில் சொல்லப்படும் ப்ரபத்தி என்னும் உபாயத்தையும் அவ்வாசார்யன் மூலமாக நமக்கு உபதேசித்தருளி அவ்வுபாயத்தை அனுஷ்டிக்கும்படி ஓர் தெளிவை ஏற்படுத்தி, நம்மை பரமபதத்தில் கொண்டு சேர்க்கிறான். பின்பு அங்கே நாம் செய்யும் கைங்கர்யங்களை ஏற்றுக் கொள்கிறான். இப்படி, பலவிதமான மஹா உபகாரங்கள் செய்ய முற்படும் நிகரற்ற எம்பெருமான் நமக்குத் தந்தை என்னும் ஸ்தானத்தில் நிற்கின்றான். அப்பெருமானின் திருவடிகளில் நம்மாழ்வாருடைய அனுகிரஹத்தாலே தலை வணங்கப் பெற்றோம்.' என்று ஸாதிக்கிறார்.

ஸம்ஸார பந்தத்தில் கட்டுண்டு ஜீவன்கள் படும் அவஸ்த்தையானது ஆழ்வார் திருவுள்ளத்திற்க்கு எவ்வளவு அஸஹ்யமாய் இருக்கிறதென்பதை தம் முதல் ப்ரபந்தமான திருவிருத்தத்தின் முதல் பாசுரத்தின் மூலம் தமது ஞானக் கண்ணுக்கு இலக்கான எம்பெருமானிடம் 'தேவரீரை அநுபவிக்கைக்கு விரோதியான தேஹஸம்பந்தத்தைப் போக்கியருள வேணும்' என்று எல்லா ஜீவன்களின் மீதும் தாம் கொண்ட மிகுந்த பக்ஷபாதத்தினால் அவர்கள் சார்பாக இமையோர் தலைவனான காஞ்சி தேவப்பெருமாளிடம் விண்ணப்பம் செய்கிறார்.

பொய்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை - உயிர் அளிப்பான்
எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா
மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே.

[திருவிருத்தம் - 1]

'எல்லா ப்ராணிகளையும் ரக்ஷித்தருள்வதற்காக பலவகைப்பட்ட பிறப்புகளையுடையனாய் திருவவதரித்தவனே! தேவாதி தேவனே! பலபல ஊழிகளாய் ஸம்ஸார பந்தத்தில் கட்டுண்டமையால் உண்டாகும் மோக்ஷத்திற்கு விரோதமான ஜ்ஞானமும் (அத்யந்த அல்பஸாரங்கள்), அதடியாக அஹங்கார மமகாரங்கள் கொண்டு செய்யப்படும் தீய நடத்தையும், ரஜஸ் மற்றும் தாமஸ குணங்கள் நிறைந்த, ஸத்வ குணம் சிறிதேனும் இல்லாத அசுத்தங்களோடு கூடின

சரீரமும் (ஆகிய இவற்றோடு கூடி) இதுபோன்ற ப்ரகாரத்தை இனிமேல் நாங்கள் அடையாதபடி அடியனாகிய நான் சொல்லும் உண்மையான விஜ்ஞாபகத்தை நின்று தேவரீர் கேட்டருள வேணும்.' என்று விண்ணப்பிக்கிறார்.

குறையா மறையின் தெளியாத நிலங்களை அனைவரும் அறிந்து தெளியும்படி முறையே நான்கு வேதங்களின் ஸாரத்தைத் அநாதியான தமிழ் பாஷையில் தெவிட்டாத அமுதமாகத் திரட்டி, என்றைக்கும் தித்திக்கும் திவ்ய ப்ரபந்தங்கள் நான்கினை நமக்குத் தந்தருளினார்.

ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார்:

த்ரமிடோபநிஷந்நிவேச சூந்யாந்
அபி லக்ஷ்மீரமணாய ரோசயிஷ்யந்|
த்ருவமாவிசதி ஸ்ம பாதுகாத்மா
ஸடகோப ஸ்வயமேவ மாநநீய:||

[ஸ்ரீபாதுகாஸஹஸ்ரம் ஸமாக்யா பத்ததி - 2]

''எல்லாராலும் போற்றப்படுகின்ற ஸ்வாமி நம்மாழ்வார் அனைவரும் பெருமாளை அடைந்து உஜ்ஜீவிக்கவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு திருவாய்மொழியைத் தந்தருளினார். இருப்பினும் பலர் அத்திருவாய்மொழியைக் கற்று உபாஸிப்பதில்லை. அப்படி கற்காதவர்களும் பெருமாளை அடைவதற்காக ஆழ்வார் தாமே பாதுகையாக அவதரித்து அனைவரின் சிரஸ்ஸிலும் ஸ்ரீசடாரியாக ஸாதிக்கப்பெற்று, அந்த ஸம்பந்தம் மூலமாக திவ்ய தம்பதிகளின் அநுகிரஹத்திற்குப் பாங்காக அனைவரையும் மாற்றியருளினார்,'' என்று ஆழ்வாரின் அருளிச்செயல்களை அறியாதவர்களும் உய்ய வேண்டுமென்று அவர் ஸ்ரீசடாரியாகத் திருவவதரித்த வைபவத்தை நிர்தாரணம் பண்ணுகிறார் ஸ்வாமி தேசிகன்.

ஆழ்வார் எம்பெருமான் விஷயமாக அருளிய தித்திக்கும் திருவாய்மொழிப் பாசுரங்கள் இருக்க, அவரின் திருநாமத்தைச் சொல்வதே தமக்கு பரம போக்கியமாய் இருக்கும் என்றும் அப்படிச் சொன்ன மறுகணமே தம் நாவில் அமுது ஊறா நிற்கும் என்றும் கொண்டாடுகிறார் குருகூர் நம்பியைத் தவிர தேவு மற்றறியாத நம் மதுரகவிகள்.

கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்
நண்ணித் தென் குருகூர் நம்பி என்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே.

[கண்ணிநுண் சிறுத்தாம்பு - 1]

ஆழ்வாரின் அத்யந்த சிஷ்யரான இவர் எழுந்தருளியிருந்த காலத்தில் எம்பெருமான் கண்ணனே இவ்வுலகில் எழுந்தருளியிருந்தான். இருப்பினும் அவனை நேரே சென்றடைந்து ஆச்ரயிக்காமல் ஓர் ஆசார்யன் மூலமாகத் தான் அடையவேண்டும் என்ற துணிவுகொண்டு தக்க ஆசார்யனுக்காகக் காத்துக்கொண்டிருந்தார். ஸ்வாமி நம்மாழ்வார் திருவவதரித்த பின் அவர் திருவடிகளில் ஈடுபட்டு அவர் திவ்ய ஸூக்திகளும் திருவடியுமே தமக்கு உபாயமாகக் கொண்டு அவருக்கு இடைவிடாது நித்யகைங்கர்யங்கள் செய்து ஆசார்ய ஸம்பந்தம் மூலமாகவே பக்தியும் ப்ரபத்தியும் ஸித்திக்கும் என்று நமக்குக் காட்டியருளினார்.

பயனன்றாகிலும் பாங்கலராகிலும்
செயல்நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்
குயில்நின்றார் பொழில்சூழ் குருகூர்நம்பி
முயல்கின்றேனுன்றன் மொய்கழற்கன்பையே

[கண்ணிநுண் சிறுத்தாம்பு - 10]

'பிறர் திருந்துவதால் தமக்கொரு பயனில்லாமல் போனாலும் அவர்கள் திருந்துவதற்குப் பாங்காக இல்லாமல் போனாலும் தமது அநுஷ்டானத்தாலே நன்றாக திருத்தி அவர்களை அடிமை கொண்டு ஆட்கொள்வதற்காக குயில்கள் ஆரவாரம்செய்யும் சோலைகள் சூழப்பட்ட திருநகரியிலே எழுந்தருளியிருக்கிற ஆழ்வாரே! தேவரீருடைய சிறந்த திருவடிகளில் அன்பு உண்டாவதைக் குறித்தே அடியேன் முயற்சி செய்கின்றேன்.' என்று ஆழ்வாரின் பாதரவிந்தங்களையே உபாயமாகப் பற்றுகிறார்.

மதுரகவிகளின் இந்த ஆசார்ய பக்தியை ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்க்ரஹம் பாசுரத்தில் அறிவித்து ஸ்வாமி மதுரகவிகள் காட்டிய ஆசார்ய பக்தி என்னும் வழியே நமக்குச் சிறந்த வழி என்று ஸ்தாபிக்கிறார்.

இன்பத்தில் இறைஞ்சுதலில் இசையும் பேற்றில்
இகழாத பல்லுறவில் இராகம் மாற்றில்
தன்பற்றில் வினை விலக்கில் தகவோக்கத்தில்
தத்துவத்தை உணர்த்துதலில் தன்மையாக்கில்
அன்பர்க்கே அவதரிக்கும் ஆயன் நிற்க
அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்
தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே.

[அதிகார ஸங்க்ரஹம் - 2]

அன்பன் தன்னை அடைந்தவர்கட்கெல்லாம் அன்பனான குருகூர்ச் சடகோபன் ஸர்வலோக சரண்யனின் சரணாகதரக்ஷண வ்ரதத்தை முன்னிட்டுக்கொண்டு **சரணமாகும் தனதாள் அடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான் (திருவாய்மொழி 9105) என்றும் வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே** (திருவாய்மொழி 1099) என்றும் அறிவித்தார். அவ்வாழ்வாருக்கு அன்பரான மதுரகவிகள் காட்டிய வழியில் சென்று நம்மாழ்வார் ஸ்ரீஸூக்திகளை உபாஸித்து, இமையோர்தலைவனைச் சரணடைந்து, இந்த ஜன்ம அநந்தரம் வைகுந்தம் சென்று சேர்வோமாக! ❊

ஸ்ரீ:

An Overview Of Thooppul Pillai's Tamil Prabandhams (2)

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

4. Paramapadha Sopanam

There are three Thaniyans — two Slokas and one Paasuram composed as a prelude for this Prabandham which extol Thooppul Pillai for determining the nine steps to reach Sri Vaikuntam ('Sopanam' means 'steps').

In the Prabandham which contains 21 Paasurams, the Acharya lays out nine steps which a Mumukshu (one desirous of Moksha) has to ascend one by one in order to achieve his objective. These are explained in two verses each in this Prabandham, after the first Paasuram gives a general introduction in which the author traces his lineage to Sri Ramanuja (எதிவரனார் மடைப்பள்ளி வந்த மணம் எங்கள் வார்த்தையுள் மன்னியதே).

The nine chapters corresponding to the equal number of steps are covered in the next 18 Paasurams and their content briefs are as follows:

Viveka Parvam — the power of discriminatory knowledge as regard to Chith (sentient), Achith (non-sentient) and Iswara (the Supreme Being).

Nirvedha Parvam — the sense of self-deprecation for doing things that are against one's Swaroopam.

Virakthi Parvam — the sense of austerity and self-denial from worldly pleasure.

Bheethi Parvam — the fear of recurrence of the experience of Samsara.

Prasaadhana Parvam — the practising of one of the only two means of attaining Moksha — Bhakthi and Prapaththi.

Uthkramana Parvam — the Jiva's leaving of the body through the critical nerve-centre in the head.

Archiraadhi Parvam — the Jiva's journey in which he is welcomed and led through the Archiraadhi way by different Adhikaaris at various stages en route to Vaikuntam.

Divyadesa Praapthi Parvam — the arrival of the jiva at Parama Padham which is beyond all the materialistic worlds.

Praapthi Parvam — the grand finale where the Jiva gets to meet the Supreme Lord Sriman Narayana, converses with him and enjoys Him and His Kainkaryam.

The 20th Paasuram summarises all the nine steps at one go and the final verse gives why we, the Jivas, live in this world even after performing Prapaththi, the all-important means. The reason provided is providence on the one hand and on the other hand, to engage ourselves in divine experience such as Bhagavath Kainkaryam, Sribhashyam, Aruli-cheyal, etc.

5. Paramatha Bhangam

Sri Desika has authored well over 100 treatises extolling the greatness of Bhagavath Ramanuja's Visishtaadvaita philosophy. Besides scores of esoteric works that were born for the specific purpose, even his hymns (in Sanskrit, Tamil and the lone number in Praakrutham) are interspersed with great deal of the salient tenets of the Sidhdhaantha.

It was an era when an alarming count of religions were not only in vogue but were rampant. Hence, there was a strong need to counter and conquer them to enable our faith thrive. Our illustrious Acharya did precisely that through works like Satha Dhushani, Sankalpa Sooryodhayam, Paramatha Bhangam, etc. at different times.

In the last-named Tamil Prabandham, which, it is believed was composed when Swami Desika resided in Thiruvaheendra Puram, the author ruthlessly shreds to pieces various philosophies, 12 to be precise, while conquering them all. In

fact, the condemnation forms the trunk of the work which may generally be classified into three parts.

After a Mangala Sloka on the Lord of Thiruvaheendra Puram, the first segment of 11 Paasurams starts with a prayer to Sudharsana followed by recollection of the great deeds of our Acharyas, the three Truths — Chethana (Sentient), Achethana (Non-sentient) and Iswara (The Supreme Being) — and the use of denouncing other religions, which, it is emphasised that, is to avert the gullible people from falling to the charms of their proponents.

In the central part, Swami Desika takes 12 religions head on and comes down heavily on them as he deals body blow to them. Along with the arguments, the apt, hard-hitting attributes used for the religions, their founders and the ideologies are a great source of enjoyment. Two verses are devoted to each religion, except for the final one (Paasupatha) which has three. It may be noted that the second religion dealt with is Boudhdha and Maadhyamika, Yogachara, Sowthraanthika and Vaibhashika are only the four branches of the same.

The religions accounted for, in that order, are:

1. Charvaaka (Paasuram Nos. 12 & 13),

2A. Maadhyamika (14 & 15),

2B. Yogachara (16 & 17),

2C. Sowthraanthika (18 & 19),

2D. Vaibhashika (20 & 21),

3. Advaitha (22 & 23),
4. Jaina (24 & 25),
5. Bhaskara-Yadhava (26 & 27),
6. Vaiyakarana (28 & 29),
7. Vaiseshika (30 & 31),
8. Gouthama (32 & 33),
9. Meemaamsaka (34 & 35),
10. Saankhaya (36 & 37),
11. Yoga (38 & 39), and
12. Paasupatha, known as Saiva (40, 41 & 42).

The final phase begins with explanation for Sri Paancharaathram, the Saasthra founded by Sriman Narayana Himself (43 & 44) and with that the author completes the conquest.

The Prabandham goes on to say how the Lord's feet are the means for deliverance, the feasibility and vitality of Prapaththi, the total futility of non-Vedic religions, the importance of treading the elders' path, the way to go as shown by Veda Vyasa, the reason for the emergence of the Prabandham, before concluding with the glory of the arms of Sri Sudharsana.

6. Mey Viradha Maanmiyam

Swami Desika has dedicated six Prabandhams to Lord Varadaraja of ThirukKachchi. Mey Viradha Maanmiyam (also known as Aththigiri/Hasthigiri Maahaathmyam) comprises the most Paasurams (29) among them. The others are: Adaikkala-Paththu, Artha panchakam, Vaishnava Dinachari, Thiru-chinna Maalai and Panniru Naamam.

Our Acharya, originally, composed a historical treatise on Kanchi and the Avathara of the Lord therein under the title Sathya Vratha Maahaathmyam. The Paasurams that form part of that work in Mani Pravaalam (a combination of Sanskrit and Tamil) have been compiled to be known as Mey Viradha Maanmiyam.

Kancheepuram, as we know, is among the seven holy towns attributed to Moksham, the others being Ayodhya, Mathura, Maya (Haridwar), Kasi, Avanthika (Ujjain) and Dwaraka. Kanchi is called 'Sathya Vratha Kshethram' for the reason that all Punya Karmas like Yaaga, Yagna, etc. yield instant benediction. The sacred place is also referred to as Hasthigiri, Karigiri and Perumal Koyil, among others. The historical nature of this work tracing back the manifestation of the Lord lends uniqueness to the Prabandham.

The Lord Varadaraja temple is situated on a hillock which, according to the legend, was the altar on which Brahma performed Aswamedha Yaga (horse-sacrifice), desiring to have a direct vision of the Lord.

At the end of the ritual, there appeared a luminous gleam like a radiant Sun from the altar even as Lord Varadaraja presented Himself in all His splendour in a Punya Koti Vimanam which resembled a golden hillock. Thus Brahma got his wish fulfilled and the place came to be known as Sathya Vratha Kshethram. Ever since, Brahma himself is said to be performing the annual Uthsavam to the Lord during the Tamil month of Vaikasi and hence it is called Brahmothsavam. The whole episode has been documented ever so beautifully and vividly by our Acharya in 'Mey Viradha Maahaathmyam'.

Starting with a salutation to Lord Varadaraja, the author pleads with scholars for a hearing of this treatise (Paasuram No. 2); requests poets to join him in singing the Lord's praise (3); and vests the

responsibility of the Prapanna with the Lord (4). And what follows is the recount of the events:

- A distraught Brahma, failing in his attempt to have direct vision of the Lord, cries like a kid that covets the moon (5)
- Brahma's indulges in self-deprecation (6)
- He reaches the sacred Bharatha Desam in order to do penance (7)
- Brahma orders master architect Viswakarma to build a sacrificial altar for him (8)
- The glory of Kanchi (9)
- Brahma delighted with the fine work of Viswakarma (10)
- Brahma asks Vasishta to bring back an estranged Saraswathi who was performing penance near Kanchi (11)
- The furious flow of Saraswathi taking the form of a river (12)
- The Lord blocking the river as a dam – Vegasethu (13)
- The whole world is ecstatic that the impasse is resolved and Brahma performs the Aswamedha Yagam (14)
- Lord Varadaraja emerges from the sacrificial altar in a Punya Koti Vimanam so resplendent that the effulgence outshines even the sun – புகல் ஓங்கு பொன்மலை அன்னதோர் புண்ணியகோடியுடன் பகலோன் பகல் விளக்காகப் பரஞ்சுடர் தோன்றியதே (15)
- Nithyasooris welcome the Lord's arrival (16 & 17)
- The description of the Lord's beauty (18)
- Worshipping the Lord as attributed in Brahma Suthras (19)
- A pleased Brahma, immersed in the experience of the Lord's form, praises Him (20)
- Brahma worships the Lord and His Consorts, with superb similies forming the description (21)
- He worships the Lord recalling His great virtues (22)
- The Lord tells Brahma if he would like any boon to be granted, to which Brahma says that the Lord stations Himself there permanently so that one and all can worship Him forever. Lord Varadaraja accedes to the request (23)
- Brahma's brief to great sages as to how to worship Lord Varadaraja during the prescribed Five Sessions (Pancha-Kaala Prakriya – Abhigamanam, Upaadhaanam, Ijyai, Swwaadhyaayam and Yogam) (24)
- Brahma goes back to Sathya Lokam and observes Yoga (25)
- Lord Varadaraja's benevolence in all four Yugas — To Brahma in Krutha Yuga, Gajendra in Thretha Yuga, Bruhaspathi in Dwaapara Yuga and Aadhi Sesha in Kali Yuga (26)
- In the concluding part, the author submits that only owing to the grace of Lord Varadaraja (27); states that, 'Vedhanthaacharya' that he is, justified his status by singing the glory of the 'Mey Viradha Nannilam' (28); and says that he could compose this work only because of his devotion to the feet of Lord Varadaraja (29).

(To be continued...)

ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' தை மாதம் முதல் இயங்கி வருகிறது.

முகவரி மற்றும் விவரங்களுக்கு:

'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்:
044 - 4322 9401.

நிர்வாகம்:
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை - 600004.

ஸ்ரீ:

With Pranams:

K. Vasudevan,

3A-9, 'Aashiana Apartments,
Venus Colony 2nd Street,
Alwarpet, Chennai - 600 018.
Mobile: 87544 48450

SVDD thanks Sri K. Vasudevan
for sponsoring this month's issue of Desika Sandesam

அவதார உத்ஸவம்

நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீவிஜயவல்லீ ஸமேத ஸ்ரீஹேதிராஜ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ப்ரதிபடஶ்ரேணீபீஷண வரகுணஸ்தோம பூஷண
ஜநிபயஸ்தாந தாரண ஜகதவஸ்தான காரண ।
நிகில துஷ்கர்மகர்ஶந நிகமஸத்தர்மதர்ஶந
ஜய ஜய ஸ்ரீஸுதர்ஶந ஜய ஜய ஸ்ரீஸுதர்ஶந।। – ஸ்ரீஸுதர்ஶநாஷ்டகம்

ஸ்ரீ ஸுதர்ஸன மஹாயஜ்ஞ பத்திரிகை 2022

ஶ்ரிய: பதியான ஸ்ரீமந் நாராயணனே ''அஹமேவ–வேத்ய:'' என்கிறபடி மாடமாமயிலை ஸ்ரீவேதாந்த தேஶிகன் ஸந்நிதியில் எழுந்தருளி பக்த ஸம்ரக்ஷணம் செய்து வருகிறார். பரமகாருணிகரான ஸ்ரீ ஸர்வேஸ்வரனுக்கு ஸர்வசக்திகளில் இச்சாசக்தி, க்ரியாசக்தி என்கிற இரு விசேஷமான சக்திகள் உண்டு. இச்சாசக்தி ஸ்ரீமஹாலக்ஷ்மியும், க்ரியாசக்தி ஸ்ரீ சக்ரரூபமான ஸ்ரீ ஸுதர்ஸந ஆழ்வானும் ஆவார்கள். பகவான், ஸ்ரீஸுதர்ஸநநைக்கொண்டு ஸகல பாபங்களையும், எல்லாவிதமான தோஷங்களையும், கஷ்டங்களையும் விலக்கி அடியார்களுக்கு ஸகலவிதமான க்ஷேமங்களையும் அளிக்கிறான். மேற்படி நம் தேவஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஸுதர்ஸநாழ்வார்க்கு நாளது சுபக்ருத் ஆனி மீ 12ம் தேதி (26.06.2022) ஞாயிற்றுக்கிழமை பிரபல ஆகம விற்பன்னர்களால் ஸ்ரீமஹா ஸுதர்ஸந ஹோமம் நடத்திக் கொள்வதாக திருவுள்ளம் பற்றியிருக்கிறான். இவ்வைபவத்தில் ஆஸ்திகோத்தமர்கள் ஸகல விதத்திலும் கலந்து கொண்டு ஸ்ரீஸுதர்ஸந ஆழ்வார் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாகும்படி ப்ரார்த்திக்கிறோம்.

தர்மகர்த்தாக்கள்

R. ராகவன் R. அனந்த பத்மநாபன் R. முகுந்தன்

உற்சவ விவரம் / நிகழ்ச்சி நிரல்

25.06.2022 - சனிக்கிழமை

காலை 9.30 மணிக்கு - ஸ்ரீ சக்கரத்தாழ்வார் - மூலவர், உத்ஸவர் திருமஞ்ஜனம்

மாலை 8:30 மணிக்கு - ஸ்ரீஸுதர்ஸந ஹோமத்திற்காக அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தணம்

26.06.2022 - ஞாயிற்றுக்கிழமை

காலை 8:00 மணிக்கு - சதுஸ்தானார்ச்சனை (கும்பம், மண்டலம் ஆராதனம்)

9:00 மணிக்கு - ஸங்கல்பம், 10:00 மணிக்கு ஹோமம் ஆரம்பம்

12:00 மணிக்கு - பூர்ணாஹுதி

12:30 மணிக்கு - ப்ரஸாத விநியோகம்

ஸங்கல்ப நன்கொடை ரூ. 1000/-

ஸேவார்த்திகள் ஹோமத்திற்குண்டான பசுநெய், தேன், பழங்கள், புஷ்பங்கள் போன்ற திரவியங்கள் மற்றும் நன்கொடைகளை தேவஸ்தான அலுவலகத்தில் நேரில் செலுத்தலாம்